**வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அவர்களின் (பொ) செயல்முறைகள்**

ந.க. எண்.1810/ஆ5/ 2025 நாள்.22/04/2025

பொருள் : பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து J-PAL Southh Asia நடத்தும், " Identifying and Nurturing Math Talent at Scale" நடத்துதல் – சார்பாக

பார்வை :

1. அரசாணை நிலை எண். 81, திட்டமிடல் மற்றும் மேம்பாடு (P&D) துறை நாள்: 19.11.2014
2. அரசாணை நிலை எண்.167, திட்டமிடல் மற்றும் மேம்பாடு (P&D) துறை நாள்: 30.11.2023
3. வேலூர் மாவட்டம், J-PAL South Asia. கள மேற்பார்வையாளரின் கடித நாள். 21.04.2025

***************

பார்வை 1 மற்றும் 2-ல் காணும் அரசாணைகளின்படி , "J-PAL South Asia" தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையின் அனுமதியுடன் "Identifying and Nurturing Math Talent at Scale" என்ற தலைப்பில் ஒரு ஆய்வை மேற்கொண்டு வருகிறது.

இந்த ஆய்வின் முக்கிய நோக்கம், கணிதத்தில் திறமை வாய்ந்த மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு Art of Problem Solving (AoPS) என்ற ஒரு ஆன்லைன் தளத்தின் மூலமாக கற்றல் வாய்ப்புகளை வழங்குவதும், அந்த வாய்ப்பு அவர்களுக்கு எவ்வாறு பயனளிக்கிறது என்பதை மதிப்பீடு செய்வதுமாகும்.

தற்போது, வருடாந்திர விடுமுறை காலம் முன்னிட்டு, தங்கள் பள்ளியில் Art of Problem Solving (AoPS) திட்டத்திற்கு தேர்வாகிய மாணவர்கள் AoPS இணையதளத்தில் உள்ள அனைத்து 7 பாடங்களையும் முழுமையாக முடிக்க முயற்சி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் தேர்வாகிய மாணவர்கள் வீட்டில் இருந்தபடியே AoPS இணையதளத்தில் உள்ள அனைத்து 7 பாடங்களையும் முழுமையாக படிக்க ஊக்குவிக்க வேண்டும். மேலும், இதனை பின்பற்றி முழுமையாக செயல்படுத்த தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு நல்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு –

தேர்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்பட்டியல்

முதன்மை கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

பெறுநர்:

சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. கள மேற்பார்வையாளர்,
   "J-PAL South Asia" வேலூர் மாவட்டம்.